RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s725

OPEN ACCESS

# வணக்கம் வள்ளுவத்தில் கவித்திறன் வெளிப்பாடு

**ச. சுதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டமலை, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Expression of Poetry in Vanakkam Valluva

**S. Sudha** [a, *]

[a] Department of Tamil, Sri Krishnasamy Arts and Science College, Mettamalai, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: sudha15mt09@gmail.com

Received: 17-12-2021
Revised: 03-05-2022
Accepted: 15-05-2022
Published: 29-07-2022

Check for updates

**ABSTRACT**

Poetry is the manifestation of the creative ability of the creator. Criticism is the analysis of the writer's writings and their characteristics. But salutation Valluva is like another writer expressing his qualities and his moods while creating a book through his writings. He has expressed the merits of Thirukkural and his questions on Valluva through poetry. In this way, in every poem, does not affect the old and welcomes the new. In this way, Erode Tamilanpanin’s poetic ability is revealed deeply in each poem.

**Keywords:** Vanakkam Valluva, Imagination, Thirukkural, New Poem, Poet

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரையிலும் பல பரிமாணங்களை அடைந்துள்ளது. உரை இல்லாமல் இலக்கியங்களை படிக்க இயலாது என்ற நிலைமாறி தற்கால இலக்கியங்கள் எளிமையாக புரிந்துகொள்ளும் வகையில் தமிழில் புது புரட்சியை உருவாக்கியுள்ளன. மரபுக்கவிதைகளில் இருந்த யாப்பிலக்கண கூறுகளை புறந்தள்ளி புதுகவிதைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆதாரமாக மாறியது (Agathiyalingam, 1998). அவ்வகையில் புதுக்கவிதை நூலான வணக்கம் வள்ளுவத்தில் கவித்திறன் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## வணக்கம் வள்ளுவ

ஈரோடு தமிழன்பன் இயற்றிய “வணக்கம் வள்ளுவ” 2004 ஆம் ஆண்டுக்கான “சாக்திய அகாதெமி விருது” பெற்ற நூல் ஆகும். இந்நூல் தமிழன்பனின் கவித்துவத்திற்கும் சான்றாக அமைகின்றது. வணக்கம் வள்ளுவ என்ற தலைப்பில் தொடங்கி உலக மனிதனை உருக்கிவார்க்க என்ற தலைப்பில் முடிகின்றது இக்கவிதை நூல். மொத்தம் 22 தலைப்புகளில் கவிதைகள் இடம்பெறுகின்றது. வள்ளுவத்தை குறித்து தனக்கு இருந்த வியப்புகளையும், கேள்விகளையும் கொண்டதாக இந்நூல் அமைகின்றது. 2002 ஆம் ஆண்டு எஸ்.ஏ. சங்கரநாராயணன் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார்.

## ஈரோடு தமிழன்பன்

ஈரோடு மாவட்டதில் சென்னிமலை என்ற ஊரில் செப்டம்பர் 28 ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் நடராசன் வள்ளியம்மாள் ஆவார். இவரது இயற்பெயர் ந.ஜெகதீசன். ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், திறனாய்வு, கட்டுரை, என இலக்கியத்தில் பல வகைமைகளை உருவாக்கியுள்ளார். சென்னிமலை கிளியோபட்ராக்கள், தோணி வருகிறது, தீவுகள் கரையேறுகின்றன, சூரிய பிறை, நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், என பல கவிதை நூல்கள் இயற்றியுள்ளார். அரசு தொலைக்காட்சியில் தமிழ் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். “அரிமா நோக்கு” என்ற ஆய்வு இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார் (Tamilanban, 2004).

## வார்த்தைகளின் தேடல்

கவிஞன் தான் சொல்ல விரும்புகின்ற செய்திகளை வார்த்தைகளால் கொண்டு நிரப்புவதே ஒரு விதமான கலை ஆகும். தமிழ்விடுதூது புலவர்களை சொல்லேர் உழவர் என்று குறிப்பிடுகின்றது. இதன் பொருள் உழவன் எப்படி ஏர் புட்டி நிலத்தை சமன் செய்வானோ அதே போல் தனது படைப்புகளில் நல்ல சொற்களை கொண்டு வந்து கோர்க்கும் திறன் உள்ளவனே சிறந்த புலவன் என்பதாகும். இதனை,

“சொல்லேர் உழவர் தொகுத்த ஈண்டி - நல்ல நெறி”

என்ற வரிகளின் வழி அறியலாம் (Swaminatha Iyer, 1941).

இக்கருத்தையே ஈரோடு தமிழன்பன் வள்ளுவரிடம் வினவுகின்றார். உன்னால் எங்கு போய் வார்த்தைகளை கொண்டு வந்து தமிழ் கிண்ணத்தில் உலகத்திற்கு ஏற்ற அறக்கருத்துகளை நிரப்பமுடிந்தது. இதனை,

“ஓசை ஒலிகள் காணாத எல்லையில்

போய்

எப்படி உன்னால்

வார்த்தைகள் தேடும் பொருளை

வாரிக் கொண்டுவர முடிந்தது?

தமிழ்க் கிண்ணத்தில்

உலகத்தை எப்படி

நிரப்பி வைத்தாய்”

என்ற கவிதை வரிகளின் வழி கவிஞரின் வார்த்தை தேடலையும் அறியமுடிகின்றது (Tamilanban, 2004).

## புதிய சொல்லாட்சி

கவிதைகளின் சிறப்புகளை உயர்த்தி காட்ட கவிஞர்கள் புதிய சொல்லாட்சிகளை பயன்படுத்தி வருகின்றனர். பாரதிதாசன் பத்திரிக்கை என்ற கவிதையில்,

“நறுமண இதழ்ப் பெண்ணே உன்

நலம் காணார் ஞாலம் காணார்”

என்ற வரிகளில் பத்திரிகையை பெண்ணாக பாவித்து “நறுமண இதழ்ப் பெண்” என்ற புதிய சொல்லாட்சியை பயன்படுத்தியிருப்பதை காண முடிகின்றது (Bharathidasan, 2010). வணக்கம்

வள்ளுவத்தில், சமய ஆன்மீகத்தை தவிர்த்து மானுட ஆன்மீகத்தை வள்ளுவர் முன்மொழிந்ததாகவும் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

"மானுட ஆன்மீகத்தை முன்மொழிந்த

உன்னை

சமய ஆன்மீகம்

தழுவ முடியமால்

தள்ளி நின்று தவித்தது"

என்ற கவிதை வரியில் 'மானுட ஆன்மீகம்' என்ற சொல்லாட்சியை கவிஞர் பயன்படுத்தியுள்ளார் (Tamilanban, 2004). மேலும் 'எட்டவாது சீர்' என்ற கவிதையில் கவிஞர் ஏன் உன்னால் எட்டாவது சீர் எழுத முடியவில்லை என்று கேட்பதாக அமைகின்றது. ஏழு சீர்களுடன் வரத் துடித்த எட்டாவது சீர் எங்கே என்று வினவும் இடத்தில். வாரத்தில் எட்டாவது கிழமை தீக்குளித்து விட்டதா? என்று குறிப்பிடுகின்றார். இதனை,

"வாரத்திற்குள் வந்துவிடத் துடித்த

எட்டாவது கிழமை

ஞாயிறு அந்தியில் தீக்குளித்திருக்கலாம்"

என்ற கவிதை வரியில்" எட்டாவது **கிழமை"** என்ற புதிய சொல்லாட்சியை கவிஞர் பயன்படுத்தியுள்ளார் (Tamilanban, 2004).

## வினா விடை அமைப்பு

கவிஞர் 'எது வள்ளுவம்' என்ற கேள்வியுடன் ஆரம்பிக்கும் கவிதையில் வள்ளுவத்தில் சொல்லாத கருத்துகளே இல்லை என்று பல சான்றாதாரங்களை காட்டுகின்றார். ஒழுக்கம், அன்புடைமை, இல்லறச்சிறப்பு, விருந்தோம்பல், ஈகைப் பண்பு, போன்ற பல சிறப்புகளுக்கும் தனது கவிதை வழி பதில் சொல்லி செல்கின்றார். எது வள்ளுவம் என்ற வினாவிற்கு, பஞ்ச புதங்கள் உயிருக்கு எவ்வளவு அவசியமோ, அதே போல் வாழ்விற்கு வள்ளுவம் அவசியமானது என்பதனை,

"விடியும் போது

வானம் வள்ளுவம்

பொழியும் போது

மழை வள்ளுவம்

எரிக்க வேண்டியதை எரிக்கத்

தவணை கேட்காதநெருப்பும்"

என்ற கவிதை வரிகளில் வினாவினை தொடுத்து அதற்கான விடைகளையும் பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது (Tamilanban, 2004).

## உரைகளின் வெறுப்பு

மூலப்பாடத்தை படிக்காமல் அதற்கான விளக்கத்தை மட்டும் படித்து புரிந்துகொள்ளும் நிலைக்கு உரை என்று பெயர், இவ்வுரை தமிழ் இலக்கிய தளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உரை இல்லாமல் பழந்தமிழ் இலக்கியங்களை படித்து, புரிந்து கொள்ள இயலாது என்ற நிலையும் உள்ளது. ஆனால் இக்கருத்தை மறுத்து ஈரோடு தமிழன்பன் 'அப்போது கேட்பேன்' என்னும் கவிதையில்

உரைகளின் மீதான வெறுப்பு குறித்த பல சிந்தனைகளை முன் வைக்கின்றார். நிலவுக்கு அர்த்தம் முகம், சிரிப்பு என்று கூறி நிலா புரியாமலே போனது என்கிறார். கடலுக்கு கருத்துரை கவிதை, காதலி உள்ளம், கப்பல் வீதி என்று கூறி கடலை மூடிவிட்டதாக குறிப்பிடுகின்றார். பூ, அம்மா என்ற சொற்களுக்கு பல பொருள்களை சான்றாக காட்டி அதை புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு தன்னை தள்ளிவிட்டதாக வருந்துகின்றார். அதே போல் வள்ளுவருக்கு பொருள் பரிமேலழகர், மணக்குடவர், என பலர் உரையே காட்டுகின்றார். படிப்பவர்கள் உரையையே முதலில் கற்கின்றனர். அதனால் வள்ளுவரை ஏன் படிக்க வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் முன் வைக்கின்றார். இதனை,

“வள்ளுவருக்கு பொருள்

வள்ளுவர் இல்லை என்றானபின்

வள்ளுவரை

ஏன் நான் படிக்க வேண்டும்

தண்ணீர் பொருள்

தண்ணீராக இல்லாவிட்டால்

அது

என் தாகத்தைத் தணிக்கும்”

என்ற கவிதை வரிகளின் வழி உரைகளை தள்ளி வைத்துவிட்டு வள்ளுவதை முழுமையாக நாமே படித்து உணரவேண்டும் என்ற செய்தியினை அறியமுடிகின்றது (Tamilanban, 2004).

## இலக்கியத் தொன்மங்களின் பதிவு

வள்ளுவ பெருந்தகை 'ஈகை' என்ற அதிகாரத்தில் கூறிய செய்திகளுக்குத் தனது கவிதை வரிகளில் பல சிந்தனைகளை முன் வைத்து ஆசிர்யர் படைத்துள்ளார். முல்லைக்கு தேர் கொடுத்த பாரி, ஔவைக்கு. அரிய வகை நெல்லிக்கனியை கொடுத்த அதியன், என ஈகை பண்பிற்கு எக்காலமும் இவர்கள் சான்றுகளாக நம்முடன் வாழ்ந்து கொண்டிப்பதாக ஆசிரியர் குறிப்பிகின்றார். இச்செய்தி பத்துபாட்டில் ஆற்றுப்படை நூலான சிறுபாணாற்றுப் படையிலும் இடம்பெறுகின்றது.

“அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த

உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவே

அரவுக்கடல் தானை அதிகனும்”

என்ற வரிகளின் வழி அறியலாம். ஈகையின் சிறப்புகளை (Swaminatha Iyer, 1974). இலக்கிய தொன்மங்கள் வழி அழகுற படைத்துகாட்டியுள்ளார். இதனை,

“மரணவிலக்கு மாத்திரை

அருநெல்லி என

அறிந்திருந்தும்

தமிழ் ஔவைக்கு அதனைத் தந்தான்

தான் உண்ணாமல் அதியன்

ஔவையும் வாழ்கிறாள்

அதியனும் வாழ்கிறான்

இடையில் இருந்து அந்த ஈகையும்

இன்னும் வாழ்கிறது.”

என்ற வரிகளின் வழி அறியமுடிகின்றது (Tamilanban, 2004).

## கற்பனைத்திறன்

கற்பனைத்திறன் படைப்புகளில் இன்றியமையாததாக இடம்பெறுவது ஆகும். நடப்பியலில் சொல்லமுடியாத பல நிகழ்வுகளை கவிஞன் கற்பனையாக படைத்துக் காட்டவான். கற்பனைத் திறனுக்கு 'கவிஞன் என்பவன்' என்ற இணைய வழி சான்றாக அமைகின்றது.

“நாம் காண முடியாத உலகை

தன் கற்பனை மூலம்

கவிதையாய் படைத்து

அதை நம் கண்முன் கொண்டு வந்து

விருந்து அளிப்பான்”

என்ற கவிதையின் வழி அறியமுடிகின்றது.

'விலை மாதர்கள் வள்ளுவரிடம் கேட்ட வினாக்கள்' என்ற கவிதை ஆசிரியரின் கற்பனை திறனுக்கு சான்றாக அமைகின்றது. கவிஞன் வள்ளுவரிடம் தான் கேட்க வேண்டிய கேள்விகளை இரண்டு விலைமாதர்கள் கேட்பதாக கற்பனை வடிவில் பதிவு செய்துள்ளார். விலை மகளிர் வள்ளுவர் வாசலில் வந்து நின்று தங்களுக்கு தனி அதிகாரம் ஒதுக்கியத்திற்கு நன்றி கூறினர். வந்தவர்களை அமர சொல்ல தீட்டுபடாதல்லவா உங்கள் வீட்டு திண்ணை என கேட்டு கொண்டு அமர்கின்றனர். 'மாய மகளிர்' என்று எங்களை வருணித்தற்கு 'மாயும் மகளிர்' என்று சொல்லியிருக்கலாமே என விலை மகளிர் தங்களின் வாழ்வியல் சூழல், மனவலி, காயங்கள், ஏக்கம் போன்றவற்றை வள்ளுவரிடம் கூறுவதாக படைத்துள்ளார். இதனை,

“மாய மகளிர்

என்று எங்களை வருணித்த

வள்ளுவரே

எங்கள் அனுபவம் உங்களுக்கும்

உண்டோ

மாயும் மகளிர் என்று

திருத்தம் செய்தால்”

என்ற கவிதை வரிகள் கவிஞரின் முற்போக்கு சிந்தனைக்கு மேலும் வலு சேர்பதாகவும் அமைகின்றது (Tamilanban, 2004).

## முடிவுரை

தமிழ் இலக்கியத்தில் புதுகவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம், என பல பாரிமாணங்களில் ஈரோடு தமிழன்பன் தனது படைப்புகளை வழங்கியுள்ளார், 'வணக்கம் வள்ளுவ' என்ற நூல் ஆசிரியரின் கவித்திறனுக்கு சான்றாக அமைகின்றது. சொற்களை கையாளும் முறை, வினாவாகவும் விடையாகவும் தானே தனித்து நின்று கவிதையை கையாணட் உத்தி, வள்ளுவ உரைகள் மீதான வெறுப்பு, இப்படி இருந்திருந்தால் என்ற கற்பனைத் திறனின் உச்சம் போன்றவை ஆசிரியரின் கவித்திறனுக்கு சான்றாக அமைகின்றது.

## References

Agathiyalingam, S., (1998) Kavithai Uruvakkam, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Bharathidasan, (2010) Bharathiar Kavithagal, Uma Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (1941) Tamilviduthuthu, U.V.SA., Library, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (1974) Pathupattu Nachinarkiniyar Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Tamilanban, (2004) Vanakkam Valluva, Poompuhar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License